அந்தத் தகவல் மாநில பதிவுத் துறைத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படுவது என்பது இதுவரையிலும் இருந்து வருகிற நடைமுறை. இருந்தாலுங்கூட, வருவாய்த் துறையில் காலதாமதமாகிறது என்ற ஒரு குறையை நிச்சயமாக இந்தத் துறை கவனித்ததன் அடிப்படையில்தான், State-wide Area Network என்ற அந்த முறையைப் புகுத்தக்கூடிய அளவிற்கு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் நூறு சதவிகிதம் முடிவடைகின்றபோது நிச்சயமாக இந்தக் குறை முழுவதுமாகக் களையப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

25—

விடுதி

***92089-திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தளியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் மற்றும் மாணவியர்களுக்கு விடுதி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, தளியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் மற்றும் மாணவியர் விடுதி தொடங்குவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலினையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

2010 நவம்பர் 11]

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் என்னுடைய தளி தொகுதிக்கு உட்பட்ட ஜவுளகிரி, மதகாண்டபள்ளி, கும்மளாபுரம், கக்கதாசம் ஆகிய பகுதிகளில் ஐந்து அரசு உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. நான்கு அரசு மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. அந்தப் பகுதியிலே பெரும்பாலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் படித்து வருகிறார்கள். அந்தப் பகுதியிலே பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்குத் தனியாக விடுதிகள் என்பது இல்லை. பெரும்பாலான மலைக் கிராமங்களிலிருந்து போதிய பேருந்து வசதி இல்லாமல், பல கிலோமீட்டர் தூரம் நடந்து வர வேண்டியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் நலன் கருதி, தளியில் இந்த ஆண்டே அந்த விடுதியைத் தொடங்க மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, அந்தப் பகுதியிலே ஒரு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி தேவை என்பதை எனக்கு வழங்கப்பட்டுள்ள குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு 26 விடுதிகளுக்கு அனுமதி கொடுத்தார்கள். அது நிறைவேற்றப்பட்டுவிட்டது. வருங்காலத்திலே புதிதாக விடுதிகள் தொடங்குவதற்கு அனுமதி வழங்குகின்ற நேரத்தில் இந்தப் பகுதிக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னுரிமை அடிப்படையில் அடுத்த ஆண்டு இந்த விடுதி தொடங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இந்த ஆண்டில் அரசின் சார்பிலே எத்தனை பிற்படுத்தப்பட்ட,

மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளன? கூடுதலாக எத்தனை மாணவ, மாணவியர் இடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 26 புதிய மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு அனுமதி வழங்கி, அவை இப்பொழுது தொடங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எப்பொழுதும்போல இந்த ஆண்டும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தந்தப் பகுதியிலே எவ்வளவு கேட்பு கேட்கிறார்களோ அதை நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். சென்ற ஆண்டு மட்டும் நிறைய கேட்பு இருந்த காரணத்தினால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இதுவரையிலும் இல்லாத அளவிற்கு 4,000 இடங்களை நிரப்பச் சொல்லி, கடந்த ஆண்டில் அனுமதி கொடுத்து, புதிதாக 4,000 இடங்களை அதிகப்படியாக நிரப்பியிருக்கிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் பொறுத்த அளவில், மாணவ, மாணவியருக்குச் செலவு செய்வதிலே எந்தவிதமான குறைபாடும் வைப்பதில்லை. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் கேட்கின்ற நேரத்திலே, ஒவ்வொரு விடுதிக்கும் எவ்வளவு எண்ணிக்கை வேண்டுமென்று கேட்க வேண்டுமேயொழிய, பொத்தாம்பொதுவாக 40, 50 என்று நாம் அனுமதிக்கின்ற நேரத்திலே, 40 மாணவர்கள் சேராமல், 20 மாணவர்கள் சேர்ந்து, அந்தப் பணம் வீணாகிறது. ஆகவே, கேட்பு கேட்கின்ற நேரத்திலே, கேட்பு இவ்வளவு இருக்கிறது; 50 அனுமதித்திருக்கிறீர்கள்; 75 மனுக்கள் இருக்கின்றன; மீதி 25 வேண்டுமென்று கணக்காகக் கேட்கின்ற நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, அனுமதி வழங்குவதிலே எந்தவிதமான கஷ்டமும் இல்லை. எனவே, நம்முடைய உறுப்பினர்கள் எவ்வளவு வேண்டுமென்று குறிப்பாகச் சொன்னால், அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்க முடியும்.

2010 நவம்பர் 11]

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2008-2009 ஆம் ஆண்டு தமிழகத்திலே ஒரு விடுதிகூட பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பாக திறக்கப்படவில்லை. அந்த ஆண்டு மட்டும் இலட்சக்கணக்கான மாணவர்கள், விடுதிகளிலே தங்கிப் படிக்க முடியாத மாணவர்கள், பள்ளிப் படிப்பையே தொடரமுடியாமல், தமிழகத்திலே பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் விடுபட்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலேகூட இதுவரை ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகூட திறக்கப்படவில்லை. இது வேறு விஷயம். மத்திய அரசாங்கத்தினுடைய புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. 100 மாணவர்கள் படித்தால் 20 மாணவர்கள் மட்டும்தான் மேல்நிலைப் பள்ளியில் படிக்கக்கூடிய அவல நிலை இன்றைக்கு நீடித்துக் கொண்டிருக்கிறது என்று. ஆக, விடுதிகளை அதிகமாகத் தொடங்குவதற்கு, விடுதிகளில் தங்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு இயலாத நிலைமையில், பல மாணவர்கள் கல்வியில் விடுபட்டு இருப்பதாகத் தகவல் உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புவது, 25 விடுதிகள் என்றால், ஒரு மாவட்டத்திற்கு ஒரு விடுதி என்று சொன்னால், மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப அது போதாத அளவிற்கு இருக்கிறது. ஆகவே, அதைக் கூடுதலாக்குவதும், எனது தொகுதியில் இருக்கக்கூடிய டி. அம்மாப்பேட்டை, அதாவது பக்கத்தில் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு வந்து செல்லக்கூடிய மாணவர்களுக்கு, அந்த உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு விடுதியும், அதேபோல ஏற்கெனவே அறிவித்து இருக்கக்கூடிய விடுதிகளை உடனடியாக அமலாக்குவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினருடைய கவலை எனக்குப் புரிகிறது. ஆனால், அவர்

சொல்வதைப்போல மாணவர்கள் எங்கேயும் சேர்க்கப்படாமல், இலட்சக்கணக்கான மாணவர்கள் இருப்பதாகக் கணக்கு இல்லை. நம்முடைய அரசு மாணவ, மாணவியர் விடுதிகளில், மொத்தம் 74 ஆயிரத்து 302 பேர்தான் தங்கிப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் முதலிலே சொல்லியதைப்போல, எவ்வளவு தேவை என்பதை நாம் தெரிந்துகொண்டோம் என்று சொன்னால், அனுமதி வழங்குவதிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எந்த நேரத்திலேயும் சுணக்கம் காட்டியது கிடையாது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர், அவருடைய பகுதியிலே எவ்வளவு தேவை, எவ்வளவு கேட்பு மனுக்கள் இருக்கின்றன என்ற புள்ளிவிவரங்களைக் கொடுப்பார் என்று சொன்னால், அரசு நிச்சயமாக அதைக் கவனத்திலே கொண்டு செயலாற்றும். நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு டிமாண்ட் அதிகமாக இருக்கிறது. கல்லூரியிலே பயிலும் மாணவர்களுக்கு நகரங்களிலே வாடகைக்கு இடம் கிடைப்பதிலே பிரச்சினை இருக்கிறது. புதிதாக நாங்கள் கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு அனுமதி கொடுத்தால்கூட, அவற்றைத் தொடங்குவதிலேகூட காலதாமதம் இருக்கிறது. அதற்கு நமது சட்டமன்ற உறுப்பினர் அனுமதி பெறுகிற நேரத்தில், இடம் கிடைப்பதற்கு வேண்டிய அந்தப் பணிகளையும், நாம் இருந்து செய்தால்தான் முடியும் என்பதையும் உறுப்பினருக்குச் சொல்லி, அரசாங்கம் இதிலே விழிப்போடு இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோருக்கு அமைக்கப்பட்டிருக்கின்ற இந்த மாணவர் விடுதி, மிகவும் அவசியமானது என்பதைக் கருத்தில்கொண்டு, நம்முடைய ஆட்சி சிறப்பாகச் சேவை செய்து கொண்டிருக்கின்ற நேரத்திலே, கணினி யுகமாகிவிட்ட இந்தக் காலகட்டத்திலே அந்த மாணவர்களுக்கு அனைத்து விடுதிகளிலும் கணினி வசதி செய்து தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2010 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு அப்படிப்பட்ட வசதிகள் செய்யக்கூடிய யோசனை அரசுக்கு இருக்கிறது. எதிர்காலத்திலே அது செய்து கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கும், குறிப்பாக அரசினுடைய உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், தனியார் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் படிக்கின்ற பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அரசு வழங்குகிற உதவித் தொகை-scholarship-இதுவரையில் தமிழ்நாட்டில் முழுமையாக இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய், அந்த மாணவர்களுக்குச் சேர வேண்டிய பணம் சேராமல் இருக்கிறது. சில பள்ளிகளில் அதைக் கொடுக்க வேண்டிய பொறுப்பில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மாவட்ட அலுவலர்களும், தலைமை ஆசிரியர்களும், "நாங்கள் எழுதிக் கேட்டிருக்கிறோம்; அவர்கள் எங்களுக்குத் தரவில்லை; நிதியில்லை" என்று சொல்கிறார்கள். ஆனால், மேல் அதிகாரிகள் மத்தியிலே, மாநில அளவில் இருக்கின்ற உயர் அதிகாரிகளிடத்திலே கேட்கின்றபோது, "நாங்கள் முறையாக அதை வழங்குவதற்கு உத்தரவிட்டு இருக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்கூட, அங்கு படிக்கின்ற பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான அந்தத் தொகை பல கோடி ரூபாய் வழங்கப்படாமல் நிலுவையில் இருந்து மிகப் பெரிய அளவில் மாணவர் போராட்டம் வெடித்து, அதற்குப் பிறகும்கூட அங்கு சரியாக வழங்கப்படவில்லை. இதுபோன்று தமிழ்நாட்டில் இருக்கின்ற பல்வேறு கல்லூரிகளிலும், பல்வேறு பள்ளிகளிலும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குக் கிடைக்கவேண்டிய scholarship கிடைக்காமல் இருப்பதை, உடனடியாகக் கிடைப்பதற்கு மாநிலம் முழுவதும் தீவிரமான ஒரு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த scholarship பணத்தைப் பொறுத்த அளவில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு பள்ளிக் கல்வித் துறையிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் கேட்பு கேட்கப்பட்டு நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் கேட்கிற அந்த மனுக்கள் காலதாமதம் ஆகிற நேரத்திலே அப்படிப்பட்ட குறைகள் வருவது சகஜமாக இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கவலையை நாங்கள் புரிந்துகொண்டு, உடனடியாக அரசாங்கம் அதற்குக் கடுமையான நடவடிக்கை எடுத்து, விரைவிலே மாணவ, மாணவிகளுக்கு அந்தப் பணம் கிடைக்கக்கூடிய வேலையை நிச்சயமாகச் செய்யும்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

26—

தரம் உயர்த்துதல்

***57939-திரு. ஆர்.கே. பாரதி மோகன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருப்பந்துறை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருப்பந்துறை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கான நிபந்தனைகளை அப்பள்ளி நிறைவு செய்யவில்லை. 2 கி.மீ. சுற்றளவில் 3 நடுநிலைப் பள்ளிகள் உள்ளன. எனவே, நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இந்தப் பள்ளி தகுதி பெறவில்லை.